MAY 2023 **U/ID 33204/UCT1D**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. கற்றளி என்பது யாது? சான்றுகள் தருக.

2. ஆலக்கோயிலின் தோற்றம் பற்றிக் கூறுக.

3. தமிழகத்தின் மிக உயரமானக் கோயில்களை எழுதுக.

4. சிற்பங்களின் வகைகளைக் கூறுக.

5. சிற்ப உருவங்களின் வகைகளைக் குறிப்பிடுக.

6. "புனையா ஓவியம் கருப்ப" - பொருள் தருக.

7. செந்துறை என்பது யாது?

8. இசை பிறக்குமிடங்களைக் கூறுக.

9. யாழ் வென்றி என்றால் என்ன?

10. தமிழ்நாடக இலக்கண நூல்களில் காணப்படும் சுவைகளைக் கூறுக.

11. பல்லவர் காலத்தில் குடைவரைக் கோயில்கள் காணப்பட்ட இடங்களுள் நான்கினைக் கூறுக.

12. ஸ்தூபி என்பது யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. மாமல்லபுரத்து மாடக்கோயில்களை விளக்குக.

14. மணிக்கோயில் - குறித்து எழுதுக.

15. யவன நாட்டுச் சிற்பத்திற்கும் நம் நாட்டுச் சிற்பத்திற்கும் உள்ள வேறுபாட்டினை விளக்குக.

16. சித்தன்னவாசல் ஓவியம் குறித்து நீவிர் அறிவன யாவை?

17. நாடகக்கதைக்குச் 'சந்தி' இன்றியமையாதது என்பதைத் தெளிவுபடுத்துக.

18. கோயில்களில் நிகழ்த்தப்பட்ட நாடகங்களைச் சான்றுடன் விவரி.

19. பாண்டியர் காலத்தில் குடைவரைக் கோயில்கள் குடைவிக்கப்பட்ட இடங்களைக் கூறுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. தமிழகக் கோயிலின் வகைகளை விளக்கிக் கட்டுரைக்க.

21. சங்க இலக்கியத்தால் அறியலாகும் இசைக் கலையைப் பற்றி விளக்குக.

22. 'தமிழகம் பரத நாட்டியத்திற்கு முன்னோடி' என்பதைக் கட்டுரைக்க.

23. நாடகக் கலையில் எண்வகை மெய்ப்பாடு இடம்பெறும் பாங்கிணை அடியார்க்கு நல்லார் வழி நின்று ஆய்க.

24. பல்லவர்கால கோயிற்கலைகளைப் பற்றி நும்பாட வழித் தெளிவுபடுத்துக.

———————